





# ஒரு தீர்க்கதரிசியின் அழைப்பு

**பாடம் 2 அக்டோபர் 10, 2026**






«“பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.”»
(ஏசாயா 6:8)

ஆபிரகாமுக்கும் (பழைய ஏற்பாட்டின் முதல் தீர்க்கதரிசி) யோவான் ஸ்நானகனுக்கும் (புதிய ஏற்பாட்டின் முதல் தீர்க்கதரிசி) இடையே ஏறக்குறைய 1900 ஆண்டுகள் இடைவெளி உள்ளது.



முதலாவது, அந்த “வித்தின்” மூலமாக உடன்படிக்கையை அறிவித்தது.
இரண்டாவது, வாக்குத்தத்தம் அளிக்கப்பட்ட அந்த உடன்படிக்கையை நிறைவேற்றவிருந்த “வித்தின்” (இயேசுவின்) வருகையை அறிவித்தது.

இதற்கிடையில், மக்களுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவை மீண்டும் நிலைநாட்டவும், மேசியாவிற்கான எதிர்ப்பார்ப்பை தக்கவைக்கவும் பிற தீர்க்கதரிசிகள் அழைக்கப்பட்டனர். அவர்களில் சிலர் மேசியாவின் வருகைக்கான துல்லியமான நேரத்தை கூட அறிவித்தனர்.
இந்த தீர்க்கதரிசிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்? தங்கள் தீர்க்கதரிசன அழைப்பிற்கு அவர்கள் எவ்வாறு பதிலளித்தனர்?




- ஆபிரகாம்: உடன்படிக்கையின் தீர்க்கதரிசி
- எலியா: மறுசீரமைப்பின் தீர்க்கதரிசி
- ஏசாயா: மேசியாவின் வருகையை அறிவித்த தீர்க்கதரிசி
- தானியேல்: எதிர்காலத்தின் தீர்க்கதரிசி
- யோவான் ஸ்நானன்: முன்னோடி தீர்க்கதரிசி

# ஆபிரகாம்: உடன்படிக்கையின் தீர்க்கதரிசி

"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." (ஆதியாகமம் 12:1)



ஆபிரகாம் தான் "தீர்க்கதரிசி" என்று அழைக்கப்பட்ட முதல் நபர் (ஆதி. 20:7). தேவன் அவரை நேரடியாக அழைத்து, தன்னை சுற்றியிருந்த விக்கிரக ஆராதனையையும் ஒழுக்ககேட்டையும் கைவிட்டு, அறியாத ஒரிடத்திற்கு செல்லுமாறு பணித்தார் (ஆதி. 12:1).

அந்த அழைப்போடு பல வாக்குத்தத்தங்களும் வந்தன. அவருக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும், அவர் உயர்த்தப்படுவார். மேலும், அவர் மூலமாக "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்பதே அந்த ஆசீர்வாதம் (ஆதி. 12:2-3).





அழைப்பிற்கு அவர் எவ்வாறு பதிலளித்தார்? "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்." (எபிரேயர் 11:8).

ஒரு தீர்க்கதரிசியாக, வரவிருக்கும் பேரழிவை அறிவிக்க அழைக்கப்படவில்லை: மாறாக, மெய்யான தேவனை வெளிப்படுத்தவும் மேசியா மூலமான இரட்சிப்பின் வாக்குத்தததங்களை அறிவிக்கவும் அழைக்கப்பட்டார்.

# ஆபிரகாம்: உடன்படிக்கையின் தீர்க்கதரிசி

"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." (ஆதியாகமம் 12:1)

**கானானில் தங்கியிருந்த காலத்தில், ஆபிரகாம் (அவரது இயற்பெயர் ஆபிராம்) பலமுறை தேவனை சந்தித்தார், அச்சமயங்களில் அவர் பல்வேறு செய்திகளை பெற்றார்:**



சீகேமில், அவரது சந்ததியினர் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று அவருக்கு வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டது (ஆதி. 12:6-7)



பெத்தேலில், அவருடைய சந்ததியினர், "பூமியின் தூளை போல" இருப்பார்கள் என்று கூறி, தேவன் அவனுடனான உடன்படிக்கையை புதுப்பித்தார் (ஆதி. 13:14-18)



மம்ரேயில், அவரது சந்ததியினர் நட்சத்திரங்களை போல எண்ணற்றவர்களாக இருப்பார்கள் என்று அவருக்கு உறுதியளிக்கப்பட்டது. "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்." (ஆதி. 15:1-6)



அந்த தருணத்தில், பலிகளின் நடுவே தேவன் கடந்து சென்று, தேவன் ஆபிராமுடன் ஒரு உடன்படிக்கை செய்தார் (ஆதி. 15:7-21)



தேவன் அவருடைய பெயரையும் சாராயின் பெயரையும் மாற்றினார், மேலும் அவருடைய சந்ததி சாராளின் மகனாகவே இருக்கும் என்று அவனுக்கு உறுதியளித்தார் (ஆதி. 17:1-8, 15-16)



தேவன் ஆபிரகாமுக்கு இரண்டு தேவதூதர்களுடன் நேரில் தோன்றி, ஈசாக்கின் பிறப்பை அவருக்கு அறிவித்தார் (ஆதி. 18:1-2, 10)



தேவன் ஆபிராகாமிடம் தன் மகன் ஈசாக்கை பலியிடுமாறு கூறினார். அதற்கு பதிலாக வேறொரு பலியை ஏற்பாடு செய்ததன் மூலம், மீட்புக்கான மாபெரும் திட்டம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது (ஆதி. 22:1-3, 9-13).

# எலியா: மறுசீரமைப்பின் தீர்க்கதரிசி

"இதோ, நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்; அதின்மேல் ஒருவன் சாய்ந்தால், அது அவன் உள்ளங்கையில் பட்டு உருவிப்போம்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும் இப்படியே இருப்பான்." (2 இராஜாக்கள் 18:21)







ஆகாபும் யேசபேலும் இஸ்ரவேல் தேசத்தை ஒரு தீவிரமான விசுவாச துரோகத்திற்குள் வழிநடத்தியிருந்தனர். வெகு சிலரே தேவனுக்கு சேவை செய்தனர்: மற்றவர்கள் பாகால், அஷெரா மற்றும் பிற தெய்வங்களை வழிபட்டனர். அத்தகைய சூழலில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடனான தனது உறவை மீண்டும் நிலைநாட்ட, தீர்க்கதரிசியாகிய எலியாவை தேவன் அழைத்தார் (1 இராஜாக்கள் 17:1).

பல வருட வறட்சிக்கு பிறகு, இஸ்ரவேலர்களை தேவனிடம் திரும்பி வருமாறு ஊக்குவிப்பதற்காக எலியா அவர்களை கர்மேல் மலைக்கு அழைத்தார்: ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை (1 இராஜா 18:21). அவர்கள் உண்மையான தேவனை அறிந்துகொள்ள ஒரு அதிசயம் தேவைப்பட்டது (1 இராஜா 18:30-39).

விக்கிரக ஆராதனையை கைவிட்டு இறைவனிடம் திரும்புமாறு அழைப்பு விடுக்கும் தீர்க்கதரிசி எலியாவின் செய்தி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக மீண்டும் வல்லமையுடன் அறிவிக்கப்படும். குடும்பப் பலிபீடத்தை மீண்டும் நிலைநாட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும் (மல்கியா 4:5-6).

குடும்பத்தின் வழியாக, திருச்சபை, சமூகங்கள் மற்றும் தேசங்களில் ஆராதனை மீண்டும் நிலைநாட்டப்படும். இப்பணியை யார் நிறைவேற்றுவார்கள்? இன்றைய சமுகத்திற்கு தேவைப்படும் அந்த "எலியா" நீங்களும் நானும் தான்.



# ஏசாயா: மேசியாவின் வருகையை அறிவித்த தீர்க்கதரிசி

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." (ஏசாயா 53:6)





மக்கள் தங்கள் பாவத்தை ஒப்புக்கொண்டு, தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களிடம் ஏசாயா அழைக்கப்பட்டார் (ஏசாயா 1:18).

உசியா இராஜா இறந்த போது, ஏசாயா ஒரு மகத்தான தரிசனத்தை கண்டார்: அது அவரது ஊழியக்காலம் முழுவதும் அவர் நினைவில் வைத்திருந்த ஒன்றாகும்: தேவன் தமது பரிசுத்த ஆலயத்தில் வீற்றிருந்தார்: ஆலயத்தின் நிலைக்கால்கள் அதிர்ந்தபோது, தீர்க்கதரிசியின் இதயமும் தனது தகுதியின்மையின் காரணமாக நடுங்கியது (ஏசாயா 6:1-5).

மன்னிக்கப்பட்டதால், அவரால் தேவனுடைய செய்தியை அச்சமின்றி அறிவிக்க முடிந்தது: "இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" (ஏசாயா 6:6-8).

அவரது நீண்ட ஊழியமானது மனந்திரும்புதலுக்கான அழைப்பை மட்டுமல்லாமல், குறிப்பாக மேசியாவாகிய இயேசுவின் பணியையும் அறிவிப்பதாக அமைந்திருந்தது.





இயல்பாகவே, ஏசாயா புத்தகம் "முன்-நற்செய்தி" (அதாவது, நற்செய்திக்கு முன்னான நற்செய்தி) என்று அழைக்கப்படுகிறது.



# ஏசாயா: மேசியாவின் வருகையை அறிவித்த தீர்க்கதரிசி



"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.(ஏசாயா 53:6)

**ஏசாயா 53ஆம் அதிகாரம், இயேசு செயல்படுத்திய மீட்பின் திட்டத்தை பற்றிய விரிவான விளக்கத்தை கொண்டுள்ளது:**



அவரது ஈர்ப்பு உடல் சார்ந்ததாக அல்லாமல், ஆன்மீகம் சார்ந்ததாக இருந்தது(வ. 2)



அவர் அவமதிக்கப்பட்டார், நொறுக்கப்பட்டார் மற்றும் நிராகரிக்கப்பட்டார் (வ. 3)



அவர் திரளான மக்களை குணமாக்கிய போதிலும், அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (வ. 4)



சிலுவையில் அவர் அடைந்த மரணத்தின் மூலம் நமக்கு இரட்சிப்பை அளிக்கிறார் (வ. 5)



தேவன் நம்முடைய பாவங்கள் அனைத்தையும் அவர்மேல் சுமத்தினார்(வ. 6)



தன்மீது குற்றம் சாட்டியவர்களுக்கு முன்னால் அவர் தன்னை தற்காத்துக்கொள்ளவில்லை (வ. 7)



அவர்மீது வழக்கு விசாரிக்கப்பட்டு, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது (வ. 8)



அவர் ஐசுவரியவான்களுடன் அடக்கம்பண்ணப்பட்டார் (வ. 9மு)



அவர் ஒருபோதும் பாவம்செய்யவில்லை (வ. 9பி)



பாவநிவாரண மரணத்திற்கு பிறகு அவர் மீண்டும் உயிர்ந்தெழுந்தார் (வ. 10)



ஒரு நாள் அவர் தாம் மீட்டுக் கொண்டவர்களுடன் வாழ்வார் (வ. 11)



இதற்கிடையில் அவர் நமக்காக பரிந்து பேசுவார் (வ. 12)

# தானியேல்: எதிர்காலத்தின் தீர்க்கதரிசி

"மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசிநாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்; (தானியேல் 2:28மு)







ஆரம்பத்திலிருந்தே, தானியேல் தனது உண்மையுள்ள தன்மைக்காக அறியப்பட்டார். அவர் உணவு விஷயத்திலும் உண்மையுள்ளவராக இருந்தார் (தானி. 1:8); தேவனுக்கு மகிமை செலுத்துவதில் அவர் உண்மையுள்ளவராக இருந்தார் (தானி. 2:27-30); நேபுகாத்நேச்சாருக்கு தீமை நேரிடும் என்று முன்னறிவிப்பதில் அவர் உண்மையுள்ளவராய் இருந்தார் (தானி. 4:19); பெல்ஷாத்சாரின் பாவத்தைக் கண்டிப்பதில் அவர் உண்மையுள்ளவராக இருந்தார் (தானி. 5:22-23); அவர் தமது ஜெப வாழ்க்கையில் உண்மையுள்ளவராக இருந்தார் (தானி. 6:10).





தம் சொந்த வாழ்வின் மூலம் அவர் வெளிப்படுத்திய செய்திக்கு மேலாக, பாபிலோன், பாரசீகம், கிரேக்கம், ரோம் மற்றும் ஐரோப்பா ஆகிய மாபெரும் உலக பேரரசுகளின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் அறிவிக்க அவர் அழைக்கப்பட்டார் (தானி. 2, 7-12).

பேரரசுகள் குறித்த தீர்க்கதரிசனங்களுக்கு இடையே, தானியேல் நியாயத்தீர்ப்பையும் (தானி. 7:9-10) இயேசுவின் முதலாம் வருகைக்கான துல்லியமான காலத்தையும் அறிவித்தார் (தானி. 9:24-27).





இன்னும் நிறைவேற வேண்டிய பகுதியான "தேவனுடைய இராஜ்யத்தின் வருகை" நிறைவேறப் போவதை அறிவிக்க, அவருடைய தீர்க்கதரிசனங்கள் இன்று நமக்கு உதவுகின்றன (தானி. 2:44; 7:27).

# யோவான் ஸ்நானகன்: முன்னோடி தீர்க்கதரிசி



"அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்." (யோவான் 1:23)

சாமுவேல் அல்லது எரேமியா போன்ற மற்ற தீர்க்கதரிசிகளைப் போலவே, யோவானும் பிறப்பதற்கு முன்பே அதற்கென பிரித்தெடுக்கப்பட்டார். மேசியாவின் முன்னோடியாக இருந்து எலியாவின் பணியை செய்ய அவர் அழைக்கப்பட்டார் (லூக்கா 1:13-17).



அவரது எளிமையான வாழ்க்கையும், பாவத்தை கண்டித்துரைப்பதிலும் மனந்திரும்புதலுக்கு அவசரமாக அழைப்பு விடுப்பதிலும் அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கையும், பலரை ஞானஸ்நானம் பெற செய்தன (மாற்கு 1:4-6). அவரது ஊழியமானது இஸ்ரவேலில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது: சாத்தானால் அதை மிகக் குறைந்த அளவிலேயே எதிர்க்க முடிந்தது. இறுதியில் அது அந்த தீர்க்கதரிசியின் மரணத்திற்கு காரணமானது (லூக்கா 9:9).



யோவானின் பணி (இதுவே எலியாவின் பணியும் ஆகும்) இப்போது நம்முடைய பணியாக உள்ளது. இயேசுவின் பாவநிவாரண மரணத்தின் மூலமான இரட்சிப்பு மற்றும் மனந்திரும்புதல் குறித்த நற்செய்தியை அனைவருக்கும் அறிவிப்பதன் மூலம், இயேசுவின் வருகைக்காக ஆயத்தமாகுமாறு நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இது மலர் படுக்கை போன்றதல்ல. இதற்கு உண்மைப்பற்று, உறுதியான நம்பிக்கை மற்றும் அற்ப்பணிப்பு ஆகியவை தேவைப்படுகின்றன. இதில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை, ஆனால் நித்திய ஜீவனுக்கு உத்தரவாதம் உண்டு (நமக்கும், இந்த செய்தியை ஏற்றுக்கொள்பவர்களுக்கும்).

“இன்று பூமியில் உள்ள தேவனுடைய சபைக்கு—அதாவது அவருடைய திராட்சத்தோட்டத்தைக் காப்பவர்களுக்கு—தீர்க்கதரிசிகள் வாயிலாக அளிக்கப்பட்ட அறிவுரை மற்றும் எச்சரிக்கையின் செய்திகள் மிகுந்த மதிப்புடையவை; ஏனெனில், மனிதகுலத்திற்கான அவருடைய நித்திய நோக்கத்தை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். தீர்க்கதரிசிகளின் போதனைகளில், வழிதவறிய மனிதகுலத்தின் மீதான அவருடைய அன்பும், அவர்களின் இரட்சிப்பிற்கான அவருடைய திட்டமும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. [...] மேலும் இன்று, அவருடைய திராட்சத்தோட்டத்தில் உண்மையுள்ள தோட்டக்காரர்களாகப் பணியாற்றும் தம் சபைக்குத் தேவன் அளிக்கும் செய்தி, பண்டைக்காலத் தீர்க்கதரிசி வாயிலாக உரைக்கப்பட்ட அதே செய்தியே ஆகும்: “அக்காலத்திலே நல்ல திராட்சரசத்தைத் தரும் திராட்சத்தோட்டம் உண்டாயிருக்கும்; அதைக்குறித்துப் பாடுங்கள். கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக்கொள்வேன்.” (ஏசாயா 27:2-3)”

எலன் ஜி உவைட் (தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும், பக். 22)

# பின்னிணைப்பு: எலன் ஜி உவைட்டின் தீர்க்கதரிசன அழைப்பு

எலன் கோல்ட் ஹார்மன் தனது 17-வது வயதில், 1844-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தனது முதல் தரிசனத்தைப் பெற்றார்.

வில்லியம் மில்லர், தானியேல் 8:14-ல் உள்ள தீர்க்கதரிசனத்தை இயேசுவின் வருகை 1843-ல் நிகழும் என்று அறிவிப்பதாகப் பொருள் கொண்டார். பின்னர், 1844 அக்டோபர் 22-ஆம் தேதி அதற்கான நாளாகக் குறிக்கப்பட்டது. ஆனால் இயேசு வரவில்லை.

அந்தச் சூழலில், பூமியிலிருந்து பரலோக எருசலேமுக்குச் செல்லும் ஒரு பாதை எலனுக்குக் காட்டப்பட்டது; இயேசுவின் வழிகாட்டுதலோடு அட்வென்டிஸ்ட் விசுவாசிகள் அந்தப் பரிசுத்த நகரத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் கண்களை இயேசுவின் மீதே நிலைத்திருக்கச் செய்தபோது, அப்பாதையில் முன்னேறிச் சென்றனர்; ஆனால் பார்வையைத் திருப்பியபோது, அவர்கள் அப்பாதையிலிருந்து கீழே விழுந்தனர்.



இந்தத் தரிசனத்தின் மூலம், தாங்கள் சரியான பாதையில் செல்வதாகக் கடவுள் விசுவாசிகளுக்கு உறுதி அளித்தார். ஆரம்பத்தில் சிலர் மட்டுமே எலனை நம்பியிருந்தாலும், காலப்போக்கில் அவர் ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரது செய்திகள் அட்வென்டிஸ்ட் மக்களைத் தொடக்கத்திலிருந்தே ஊக்குவித்து வழிநடத்தி வந்தன; இன்றும் அவை அவ்வாறே தொடர்ந்து வருகின்றன.

